**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.283/2023**

**Prosecution witness : அ.சா.10** **Date : 20.12.2024**

| Name : சண்முகம் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர் வட்டம் தம்பம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 25/10/2022-ம் தேதி மதியம் 02.00 மணிக்கு இவ்வழக்கில் காவல் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் தங்கராஜ் அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, அருள்பாண்டியன் மனைவி ரேவதி அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண். 560/2022 ச/பி 279, 337 இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார்.

2) பிறகு காவல் உதவி ஆய்வாளர் தங்கராஜ் கடந்த 25.10.2022ம் தேதி மதியம் 03.00 மணிக்கு சம்பவயிடமான தொப்பூர் டூ மேச்சேரி சாலை மேச்சேரி அரசு மருத்துவமனை அருகில் சாட்சிகள் இளவரசன் மற்றும் அறிவழகன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்.

3) இவ்வழக்கின் காவல் உதவி ஆய்வாளர் தங்கராஜ் அவர்கள் கடந்த சாட்சிகள் பூபாலன், நல்லதம்பி, ரஞ்சித் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் காயம் அடைந்த அருண்பாண்டியன் அவர்கள் இறந்து போன காரணத்தால் பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து வழக்கு கோப்பை

என் வசம் ஒப்படைத்தார். இவ்வழக்கில் காயமடைந்த அருண்பாண்டியன் என்பவர் விபத்திற்கு பிறகு ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மருத்துவர் குணவதி என்பவர் சிகிச்சை அளித்த பின்னிட்டு சிகிச்சை பலனின்றி கடந்த 25.10.2022ம் தேதி அன்று இறந்துவிட்டதால் இறப்பு குறித்த அறிக்கை தயார் செய்து பிணவறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இறப்பு குறித்த அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். போலீஸ் இன்டிமேஷன் **அ.சா.ஆ.3** ஆகும். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆகும். பிறகு வழக்கு கோப்பை பெற்ற நான் இறந்து போன அருண்பாண்டியன் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் அருண்கௌதம் அவர்களிடம் பெண் காவலர் அன்னக்கொடி என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 26.10.2022ம் தேதி மதியம் 02.40 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும். சடலக்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ–6** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

4) இவ்வழக்கில் விபத்தில் ஈடுபட்ட TN–52 V 9702 Hero Honda Passion Plus வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி வசம் அனுப்பப்பட்டது. விபத்தில் ஈடுபட்ட TN–93 1214 TVS Jupiter இரு சக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி வசம் அனுப்பப்பட்டது. கடந்த 01/11/2022ம் தேதி மாலை 03.00 மணிக்கு எதிரியை கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

5) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 30.11.2022–ம் தேதி

குற்றஎண். 560/2022 ச/பி 279, 337 பிரிவிலிருந்து ச/பி. 279, 304(ஏ)ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

6) இந்த வழக்கு கோப்பை என்று என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் 26.10.2023ம் தேதி ஒப்படைக்கப்பட்டது. அன்றையதினமே விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். எந்தெந்த சாட்சிகளை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் பிரேத விசாரணை சாட்சிகளான ரேவதி, சந்திரசேகரன், தமிழ்செல்வன், பழனிசாமி, ராஜமாணிக்கம், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி, மருத்துவர் குணவதி, அருண்பிரபு, முதல் நிலை காவலர் 1559 திருமதி அன்னக்கொடி மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் தங்கராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7) என்னுடைய விசாரணையின் படி விபத்து எவ்வாறு ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன் என்றால் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும், சைகை எதுவும் காட்டாமலும் திடீரென ரோட்டின் வலது புறம் வளைந்து இறந்தவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன்.

8) எந்த வாகனத்தின் மீது எந்த வாகனம் மோதியது என்றால் எதிரியின் வாகனம் இறந்தவரின் வாகனத்தின் மீது மோதியதாக தெரிய வந்தது. எதிரியின் வாகனம் இறந்து போன நபரின் வாகனத்தின் எந்த பகுதியில் மோதியதாக எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் எதிரி ஓட்டிச் சென்ற வாகனத்தின் வலது புற பகுதியானது இறந்த நபரின் மீது இடது புறம் மோதியதாக தெரிய வந்தது.

9) இரு சக்கர வாகனத்திற்கு எந்த தேசமும் இல்லை என்றால் சரிதான். எதிரி ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனம் இறந்த நபரின் வாகனத்தின் மீது மோதவில்லை என்றால் சரிதான். அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகிய சாட்சிகள் என்

விசாரணையின் படி கண்ணுற்ற சாட்சிகளா அல்லது கேள்விப்பட்ட சாட்சிகளா என்றால் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள்.

10) எதிரி எங்கு குடியிருக்கிறார் என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் மேச்சேரி அரசு மருத்துவமனை குடியிருப்பில் தான் அவர் குடியிருப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சொன்னமாதிரி, சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில், சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் சம்பவயிடம் செல்லாமல் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 யை நான் மறுவிசாரணை செய்யவில்லை என்றாலும், அவரை நான் மறுவிசாரணை செய்திருந்தால் அவர் நீதிமன்ற சாட்சியத்தில் மறுவிசாரணை செய்த விவரத்தை சொல்லியிருப்பார் என்று சொன்னால சரியல்ல. வழக்கில் இறந்து போன நபர் காவல் நிலையத்தில் தட்டச்சராக பணிபுரிந்தார் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக எதிரி மீது தவறுதலான நிலையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனது நிலைய உதவி ஆய்வாளர் தவறுதலாக போட்டு வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை சரிவர விசாரிக்காமல் நான் அதற்கு ஆதரவாக இறுதி அறிக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**ம.வி.இல்லை.**

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.